1992 மார்ச் 24]

வாதாடாமல் இருந்ததனால் அரசுக்கும் விவசாயிகளுக்கும் விரோதமான முறையிலே தீர்ப்பளிக்கப்பட்டது. குறிப்பிட்ட காலத்திலே உச்ச நீதிமன்றத்திற்கு வழக்கு வந்தபோது கூட குறிப்பிட்ட காலக் கட்டத்தில் அந்த அரசாங்கம் அப்பீல் செய்யாமல் இருந்துவிட்டது. அதன்பிறகு திரும்பவும் நமது அரசு கோர்ட்டுக்கு அப்பீல் செய்திருப்பதாகத் தெரிகிறது. சென்னை ஹைக்கோர்ட்டில் வந்த அந்தத் தீர்ப்பின்மீது தடையுத்தரவு வாங்க வேண்டுமென்று அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிகிறது. அந்தத் தடையுத்தரவைப் பெறுவதற்கு பல மாதங்கள் ஆகிக்கொண்டிருக்கின்றன. இதனால் விவசாயிகள் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். நமது அரசு ஏழையெளிய விவசாயிகள் மீது அக்கறை கொண்ட அரசு. டாக்டர் இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் ஒரு சிறந்த வழக்கறிஞரை அல்லது தலைமை வழக்கறிஞரை வைத்து இந்த வழக்கை வேகமாக நடத்தி, அதன்மூலம் விவசாயிகளுக்கு பட்டாக் கொடுத்து அவர்கள் பலன் அடையும் வகையில் தேவையான நடவடிக்கையைத் துரிதமாக அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை எல்லாம் அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு, அதற்கு ஏற்றவாறு நடவடிக்கைகளில் ஈடுபடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 281, திரு. எம்.கே. பாலன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

281— சைதாப்பேட்டை பனகல் கட்டிடம்.

*3925—திரு. எம்.கே. பாலன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை சைதாப்பேட்டை பனகல் கட்டிடம் இடிக்கப்பட்ட இடத்தில் புதிய கட்டிடம் எப்போது கட்டப்படும்;

(ஆ) எவ்வளவு மதிப்பீட்டில் கட்டப்படும்?

(இ) அந்தக் கட்டிடத்தில் எந்தெந்த அலுவலகங்களுக்கு இடம் ஒதுக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ): கட்டிடங்கள் கட்டி முடியும் தறுவாயில் உள்ளன. 31–12–1992-க்குள் முடிந்துவிடும். ரூ 6 கோடி மதிப்பிடப்பட்டு வேலைகள் நடைபெறுகின்றன.

முற்பகல் 9-35

திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டப்பட்ட கட்டிடங்கள் வருவாய்க்காக சதுர அடிக் கணக்கில் ஏலம் விடப்படுமா அல்லது ஒதுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது கட்டுவதற்கு முன்பு எப்படி ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கின்றன என்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை. ஆனால் கட்டப்பட்ட கட்டிடம் வருவாய்க் கோட்ட அலுவலகத்திற்கும் மற்றும் வருவாய்த் துறை சார்ந்த அலுவலகங்களுக்கும், வளர்ச்சித் துறைக்கும் ஒதுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டப்பட்டு முடிக்கின்ற கட்டிடம் வேறு எந்த அலுவலகத்திற்காவது ஒதுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய எந்தெந்தத் துறைக்குத் தேவைப்படுகிறதோ, அந்தக் கட்டிடத்தினுடைய விஸ்தீரணத்திற்குத் தகுந்தபடி, துறையினுடைய முக்கியத் துவத்தைக் கருதி, அந்தத் துறைக்கு ஒப்படைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 320, திரு. உ. பலராமன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

320—

பிற்பட்டோருக்கான சலுகைகள் குறித்து மண்டல் கமிஷன் அறிக்கையிலுள்ள குறிப்பு.

*6659—திரு. உ. பலராமன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :

தமிழகத்தில் பிற்பட்டோருக்கான சலுகைகளில் பெரும் பகுதி மிகவும் குறைந்த மக்கள் தொகையை உடைய 9 இனத்த வருக்கு மட்டும் பயன்படுமாறு மண்டல் கமிஷன் அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளதன் காரணத்தை அரசு ஆராயுமா?